**24.07.2025**

அ.வ.எண். **38/2021**

<u>வா.சா.**5** கிருஷ்ணன் குறுக்கு விசாரணை</u>

**1.** எனது பிரமாணவாக்குமூலத்தில் உள்ள பிறந்த தேதிகள் அனைத்தும் தெரியும் என்றால் தெரியும் என்றால் சரிதான். தாவா பி அட்டவணை சொத்து எந்த வகை புறம்போக்கு நிலம் என்றால் மேய்க்கால் புறம்போக்கு நிலம் ஆகும். அந்த கிராமத்தை சேர்ந்தவர்கள் மேற்சொன்ன புறம்போக்கு நிலம் வழியாக சென்று வரலாம் என்றால் சரிதான். தாவா பி அட்டவணை சொத்திற்கு பதிவு செய்யப்பட்ட ஆவணம் அல்லது பதிவு செய்யபடாத ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை.

**2.** தாவா சொத்துக்கான வம்சாவளி விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். பாகபிரிவினை ஜெகநாதன், கிருஷ்ணன் மற்றும் ஜெயராமன் ஆகியோருக்குள் அவர்களது குடும்ப சொத்துகள் பாகபிரிவினை ஏற்பட்டது மேற்சொன்ன நபர்களுக்கும் இந்த வழக்கின் வாதிகள் மற்றும் பிரதிவாதிக்கு என்ன சம்பந்தம் என்றால் கிருஷ்ணன் என்பவரின் பிள்ளைகள் தான் பிரதிவாதிகள் ஆவார்கள். வாதி தனிநபர்கள் ஆவார்கள். **1**ம் பிரதிவாதி தம்பி தான் **2**ம் பிரதிவாதி சிவா என்றால் சரிதான். **1**ம் மற்றும் **2** பிரதிவாதிகளின் உடன்பிறந்தவர்கள் வேறு நபர்கள் இருக்கிறார்களா என்றால் இருக்கிறார்கள். கடந்த இரண்டு மாதமாக பிரதிவாதிகளின் உடன்பிறந்த சகோதரிகள் தாவா அ அட்டவணை சொத்தில் தங்களுக்கும் பங்கு உண்டு என்று குடும்பத்தில் பிரச்சனை செய்தார்கள் என்றால் எனக்கு தெரியாது.

3. பாகபிரிவினை பத்திரம் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளார்களா என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து குறித்த விவரம் எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் குடும்ப விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.